OS No.75/2017, நாள்: 06.11.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சகுந்தலா | வயது | : 60 |
| கணவர் பெயர் | : கிருஷ்ணன் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : குடிமேனஹள்ளி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : ___ |

<u>வா.சா.2 ___ சகுந்தலா, குறுக்கு விசாரணை:</u>

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் குடிமேனஅள்ளயில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு யார் மீது யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் மனோகரன் முனியப்பன்மீது தாக்கல் செய்துள்ளார். எந்த சொத்தை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்ப்பட்டள்ளது என்றால் கிணர் திட்டு இல்லை என்று தாக்கல் செய்துள்ளார். முனியப்பன் ஏற்கனவே உள்ள சுவற்றின் உள்தான் வீடு கட்டி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் யார் யார் என்ன செய்கிறார்கள் என்றும் யார் யார் வீடு, எவ்வாறு உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த இடத்தில் என்ன அமைப்பு உள்ளது என்று தெரியாது என்றால் தெரியும் கிணற்றில் ஆளுக்கு பாதி. எங்களுக்கு பாத்தியப்பட்டதை வாதிகளுக்கு விற்றுவிட்டோம். எங்களுக்கு பாகம் வந்தது மொத்தம் எத்தனை சென்ட் நிலம் என்று தெரியுமா என்றால் தெரியாது நாங்கள் விவசாயம் செய்து வந்த நிலத்தை வரப்போடு அவர்களுக்கு

விற்பனை செய்தோம். எங்களுக்கு எவ்வளவு சொத்து வந்தது என்று தெரியாத பட்சத்தில் நாங்கள் எழுதிக்கொடுத்த சொத்திற்கும் இந்த வழக்கிற்குமே சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சொத்தை விற்றுவிட்டதால் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனக்கு தெரியாத சங்கதிகளை சாட்சிகளாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களிடமிருந்து நிலம் வாங்கியவர்கள் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடரவும் உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. எவ்வளவு நிலம் நாங்கள் விற்பனை செய்தோம் என்று நான் சொல்லமுடியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.